27-08-2023 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 16.11.1995

வைர விழா ஆண்டை பற்றுதலில் இருந்து விடுபட்ட ஆண்டாகக் கொண்டாடுங்கள் என்பது தான் பாப்தாதாவின் விருப்பம் !

இன்று பாப்தாதா நாலாபுறத்திலுமுள்ள உள்ளபூர்வமாக தந்தையின் நினைவில் இருக்கக் கூடிய தன்னுடைய அன்பிற்குரிய சுகயோகி குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். குழந்தை களுக்கு எவ்வளவு அன்பு இருக்கிறதோ அந்த அளவே தந்தைக்கும் குழந்தைகளின் மேல் அன்பு இருக்கிறது. தந்தை அனைத்து குழந்தைகளுக்கும் ஒரே சமமாக அதிக அன்பைக் கொடுக்கிறார். ஆனால் குழந்தைகள் அவரவர்களின் சக்திக்கு ஏற்றபடி அன்பை தாரணை செய்கிறார்கள். எனவே தந்தைக்கும் வரிசைக்கிரமமாக அன்பு நினைவுகள் என்று கூற வேண்டியதாக இருக்கிறது ஆனால் தந்தை அனைத்து குழந்தைகளுக்கும் உள்ளப்பூர்வமான மிக உயர்ந்த அன்பை அமிர்தவேளையிலிருந்தே கொடுக்கிறார். எனவே, அமிர்தவேளையை விசேஷமாக குழந்தைகளுக்காக மட்டும் வைக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அமிர்தவேளை முழு நாளின் தொடக்க நேரம் ஆகும். ஆக எந்தக் குழந்தைகள் தொடக்க நேரத்தில் தந்தை யின் அன்பை உள்ளத்தில் தாரணை செய்து விடுகிறார்கள் என்றால், உள்ளத்தில் பரமாத்மாவின் அன்பு உள்ளடங்கி இருக்கும் காரணத்தினால் வேறு எந்த அன்பும் தன் பக்கம் ஈர்ப்பதில்லை. ஒரு வேளை தன்னுடைய நிலைக்கேற்றபடி முழுமையாக உள்ளத்தை நிரப்பி, தந்தையின் அன்பை உள்ளத்தில் தாரணை செய்யவில்லை, கொஞ்சமாவது காலியாக உள்ளது. அரைகுறை யாக எடுத்திருக்கிறார் என்றால் உள்ளத்தில் இடம் இருக்கும் காரணத்தினால் மாயா விதவித மான அனேக அன்பின் ரூபத்தில் மனிதர்கள் மேலும் வைபங்கள் ஆகிய இரண்டு ரூபங்களிலும் அந்த அன்பு தன் பக்கம் ஈர்த்து விடுகிறது.

எங்களிடம் இதுவரையிலும் மாயா ஏன் வருகிறது என்று சில குழந்தைகள் பாப்தாதா விடம் கூறுகிறார்கள். எப்பொழுது மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி விட்டீர்கள் என்றால் மாயா வருவதற்கான கேள்வியே எழாது ஆனால் என்ன காரணம் என்றால் ஆதிகாலத்தில் அமிர்த வேளையில் தன்னுடைய உள்ளத்தில் பரமாத்மாவின் அன்பை சம்பூர்ண ரூபத்தில் தாரணை செய்வதில்லை. ஒருவேளை ஏதாவது ஒன்று பாதி நிரம்பியிருக்கிறது. கொஞ்சம் காலியாக இருக்கிறது என்றாலும் ஸ்திரமாக இருக்காது. ஆட்டம் காணும் இல்லையா! அமிர்தவேளை யில் எழுந்திருக்கவும் செய்கிறீர்கள், அமரவும் செய்கிறீர்கள், நன்றாக யோகா செய்ய வேண்டும் என்ற லட்சியமும் இருக்கிறது, மேலும் ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்று கூறவும் செய்கிறீர்கள்... இதை உள்ளத்தில் இருந்து கூறுகிறீர்களா அல்லது வாயளவில் கூறு கிறீர்களா? உள்ளப்பூர்வமாக கூறினீர்கள் என்றால் உள்ளத்தில் வேறு கவர்ச்சிக்கான காரணம் என்ன? அவசியம் மனிதர்கள் அல்லது வைபங்கள் பக்கம் அன்பு செல்கிறது. அதனால் தான் தன் பக்கம் ஈர்க்கிறது உள்ளத்தில் பரமாத்மாவின் அன்பு முழுமையாக நிரம்பியிருப்பதாக இருப்பதில்லை. நீங்கள் யோசியுங்கள், ஒருவேளை உங்களுக்கு ஒரு கையில் யாராவது வைரம் கொடுக்கிறார் மற்றும்

இன்னொரு கையில் மண் உருண்டையை கொடுக்கிறார் என்றால் உங்களுடைய ஈர்ப்பு எங்கே செல்லும் வைரத்தில் செல்லுமா, மண்ணின் பக்கம் செல்லுமா? மண்ணோடு விளையாடுவது கூட பிடித்திருக்கிறது தான் இல்லையா! வீணான எண்ணம் இது கூட என்னவாக இருக்கிறது? வைரமா அல்லது மண்ணா? மண்ணோடோ விளையாடு கிறீர்கள் தான் இல்லையா! பழக்கம் ஏற்பட்டிருக்கிறது அதனால் தானோ? மனிதர் கூட என்ன? மண் தான் இல்லையா. மண் மண்ணோடு கலந்து விடுகிறது. முகத்தினாலோ, ஏதாவது விசேஷத் தினாலோ ஏதாவது குணத்தினாலோ பார்ப்பதற்கு உங்களுக்கு மிக அழகாகத் தென்படும் ஆனால் எனக்கு எந்த பற்றுதலும் இல்லை, அன்பும் இல்லை, ஆனால் இவருடைய இந்த குணம் மிக நன்றாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். அப்படி குணத்தின் பிரபாவம் கொஞ்சம் ஏற்பட்டு விடுகிறது அல்லது இவரிடம் சேவையின் விசேஷத் தன்மை மிக அதிகமாக இருக்கிறது என்றால் சேவையின் விசேஷத்தின் காரணமாக கொஞ்சம் அன்பு இருக்கிறது என்று கூறுகிறார்கள். வார்த்தையில் சொல்ல மாட்டார்கள், ஆனால் விசேஷமாக அல்லது வைபவத்தின் பக்கம் அடிக்கடி எண்ணமும் செல்கின்றது நடந்தால் மிக நன்றாக இருக்கும்! இதுவும் ஈர்க்கப்படுவது தான். அந்த மனிதருக்கு சேவையின் விசேஷத்தைக் கொடுத்தது யார்? அந்த மனிதரா அல்லது தந்தை அளிக்கிறாரா? யார் கொடுக்கிறார்? அந்த மனிதர் மிக நல்லவர், நல்லவர், அது சரி தான், ஆனால் எப்பொழுது ஏதாவது விசேஷத்தை பார்க்கிறீர்கள், குணத்தை பார்க்கிறீர்கள் சேவையை பார்க்கிறீர்கள் என்றால் வள்ளலை (பாபாவை) மறக்காதீர்கள். இந்த மனிதர் கூ பொறுபவரேயன்றி வள்ளல் அல்ல. தந்தையின் குழந்தையாக ஆகாமல் அந்த மனிதரின் இந்த சேவையின் குணம் அல்லது விசேஷத்தன்மை வர முடியுமா? அல்லது அந்த விசேஷத்தை அஞ்ஞான காலத்திலிருந்தே கொண்டு வந்திருக் கிறாரா? ஈஸ்வரிய சேவையின் விசேஷத்தன்மை அஞ்ஞான காலத்தில் இருக்க முடியாது. ஒருவேளை அஞ்ஞானத்தில் கூட ஏதாவது விசேஷம் அல்லது குணம் இருக்கிறது என்றால் கூட ஞானத்திற்கு வந்த பிறகு அந்த குணத்தில் மற்றும் விசேஷத்தில் ஞானம் நிரப்பபடவில்லை என்றால் அந்த விசேஷத்தன்மை மற்றம் குணம், ஞான மார்க்கத்திற்கு பிறகு இவ்வளவு சேவை செய்ய முடியாது. இயற்கை யான குணத்தில் கூட ஞானத்தை நிரப்பத்தான் வேண்டும். அப்படி ஞானத்தை நிரப்புபவர் யார்? தந்தை. அப்படியானால் யார் கொடுத்த பரிசு ஆனது? வள்ளல் யார்? அப்படியானால் உங்களுக்கு பெறுபவர் பிடித்திருக்கிறதா அல்லது கொடுப்பவர் வள்ளல் பிடித்திருக்கிறதா? அப்படியானால் பெறுபவன் பின்னால் ஏன் ஓடுகிறீர்கள்?

தந்தையின் எதிரில் அல்லது தாதிகளின் எதிரில் மிக இனிமையாகக் கூறுகிறார்கள். என்னுடைய பற்று கொஞ்சம் கூட இல்லை, முற்றிலும் இல்லை, சேவை காரணமாக கொஞ்சம் இருக்கிறது என்று கூறுவார்கள். கொஞ்சம் என்று கூறி தன்னை விடுவித்துக் கொள்கிறார்கள் ஆனால் இந்த ஈடுபாடு குணங்களில் மேலானதும் அல்லது சேவைக்காக இருந்தாலும் இந்த பற்று இன்று இல்லையென்றாலும் நாளை எங்கு கொண்டு செல்லும்? சிலரையோ இந்த பற்று பழைய உலகம் வரை கூட அழைத்துச் செல்கிறது ஆனால் பெரும்பான்மையோர் பழைய உலகம் வரை செல்வதில்லை. சிலர் சொல்கிறார்கள். பெரும்பான்மையோருக்கு இந்த விதமான பற்று முயற்சி செய்வதில் அலட்சியத்தன்மையின் பக்கம் கொண்டு செல்கிறது. பிறகு

இப்படியோ சிறிது அதிகமாவோ இருக்கிறது. பிறகு தந்தைக்கும் புரிய வைக்க முற்படு கிறார்கள். பாபா நீங்களோ சாகாரத்தில் இல்லை, பிரம்மபாபாவும் அவ்யக்தமாகி விட்டார், மேலும் நீங்களோ பிந்துவாக ஜோதியாக இருக்கிறீர்கள். நாங்களோ சாகாரத்தில் இருக்கிறோம். இவ்வளவு பெரிய ஆரோக்கியமான உடல் இருக்கிறது. மேலும் உடல் மூலம் அனைத்தையும் செய்ய வேண்டும். நடக்க வேண்டும் அப்படி நாங்கள் சாகாரத்தில் இருக்கிறோம் மேலும் நீங்கள் ஆகாரம் மற்றும் நிராகாரமாக இருக்கிறீர்கள். எனவே, சாகாரத்தில் யாராவது வேண்டும் அல்லவா! நல்லது. அனேகர் வேண்டும் என்பது இல்லையென்றாலும் ஒருவரோ வேண்டும் இல்லையா! ஒருவர் கூட வேண்டாமா! பாருங்கள் பாப்தாதாவோ ஒருவர் வேண்டும் என்று கூறுகிறார். வேண்டாமா? (ஒரு பாபா வேண்டும்) தந்தையோ இருக்கவே இருக்கிறார் ஆனால் பல தடவை மனதில் பல விசயம் வந்து விடுகிறது, மற்றம் மனம் பாரமாகி விடுகிறது. எதுவரை மனதை லேசாக்கவில்லையோ அதுவரை யோகாவும் செய்ய முடிவதில்லை. பின்பு என்ன செய்வது? அந்த மாதிரி நேரத்தில் என்ன செய்வது என்பது தந்தையின் கேள்வி யாகவும் இருக்கிறது. மனம் பாரமாக இருக்கிறது, மேலும் யோகா செய்ய முடியவில்லை என்றால் என்ன செய்வது? நேர்மாறாகவோ, உள்ளுக்குள்ளேயே பிடிவாதம் பிடிக்கவா? மருத்துவர்கள் என்ன கூறுகிறார்கள்? ஒருவேளை வயிறு பாரமாகி விடுகிறது என்றால் வாந்தி எடுத்து வெளியேற்றி விட வேண்டுமா அல்லது உள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டுமா? மருத்துவர்கள் என்ன கூறுகிறார்கள்? வாந்தி எடுக்க வேண்டும் தான் இல்லையா. அப்படி வாந்தி எடுக்க வேண்ம் என்று மருத்துவரும் கூறுகிறார். நல்லது.

இதுவோ உடலின் மருத்துவரின் விசயமானது மேலும் நீங்கள் அனைவரும் மனதின் மருத்துவ ராக இருக்கிறீர்கள். உடலின் மருத்துவர் தன்னுடைய பதிலைக் கூறினார். இப்பொழுது ஒருவேளை மனதில் ஏதாவது குழப்பம் இருக்கிறது என்றால் எங்கு வாந்தி எடுப்பது என்று மனதின் மருத்துவர்கள் நீங்கள் கூறுங்கள். பாபாவின் எதிரில் வாந்தி எடுப்பீர்களா ( பாபாவின் அறையில் சென்று வாந்தி எடுக்க வேண்டும்) அறையில் சென்று வாந்தி எடுத்து விட்டு வரவா. யோசியுங்கள் தந்தையின் எதிரில் வாந்தி எடுப்பீர்களா? இல்லை என்றால் எங்கு செல்வீர்கள்? ஏதாவது இடத்தை கூறுங்களேன். அந்த நேரம் யாராவது அவசியம் வேண்டும் என்று பாப்தாதாவோ குழந்தைகள் பக்கம் சார்ந்து கொள்கிறார். தந்தையிடம் கூறலாமா? ஒருவேளை தந்தை கேட்பதே இல்லை என்றால் என்ன செய்வது? நானோ பாபாவிடம் கூறிவிட்டேன். பாபாவோ கேட்கவேயில்லை. பதிலே தரவில்லை என்று அனேக குழந்தைகளின் புகார் இருக்கிறது. பின்பு என்ன செய்வது? உண்மையில் ஒருவேளை உள்ளத்தில் பரமாத்மாவின் அன்பு, பரமாத்மாவின் சக்திகள், பரமாத்மாவின் ஞானம் முழுமையாக இருக்கிறது. சிறிது கூட காலியில்லை என்றால் ஒருபொழுதும் யார் பக்கமும் ஈர்ப்போ அல்லது அன்போ செல்ல முடியாது.

எனக்கு பற்று இல்லை ஆனால் கொஞ்சம் பிடித்து மட்டும் இருக்கிறது என்று சிலர் கூறுகிறார்கள் என்றால் இதை எந்த வரிசையில் எடுத்துக் கொள்ளலாம்? பற்று இல்லை, நான்றாக உள்ளது என்றால் இதை என்னவென்று கூறுவது? பிடித்திருக்கட்டும், நன்றாகவே இருக்கட்டும் என்று இதற்கு அனுமதி கொடுத்து

விடலாமா? பற்று இல்லை அவரோடு அமர்வது, அவருடன் பேசுவது, அவர் மூலமாக சேவை செய்விப்பது என்ற இது பிடித்த மானதாக இருக்கிறது என்றால் இதற்காக அனுமதி கொடுத்து விடலாமா? யார் கொஞ்சம் கொஞ்சம் கொடுக்கத் தான் வேண்டும். என்று புரிந்து உள்ளவர்கள் இப்பொழுது சம்பூர்ணமாக ஆகவில்லை, முயற்சி செய்து கொண்டிருக்கிறோம், கொஞ்சம் அனுமதி கொடுக்கத்தான் வேண்டும் என்பவர்களோ கையை உயர்த்துங்கள். இப்பொழுது கையை உயர்த்த மாட்டீர்கள். ஏனென்றால் வெட்கம் வரும் இல்லையா! ஆனால் ஒருவேளை நீங்கள் கொஞ்சம் அனுமதி இருக்க வேண்டும் என்று புரிந்துள்ளீர்கள் என்றால் தாதியிடம் தனிப்பட்டு கடிதம் எழுதி கொடுத்து விடுங்கள். ஐந்து நிமிடம் பேச வேண்டும் என்று சொன்னால் இதற்கோ இன்னும் நேரம் வேண்டும் என்ற அந்த மாதிரி கூறாதீர்கள். கடிதம் எழுதிவிட்டீர்கள் என்றால் பாப்தாதா அவர்களின் நல்ல குழுவை கூட்டுவார். இன்னும் நன்றாகி விடும் அல்லவா? இப்பொழுது அனைவரும் வேண்டாம் என்று கூறுகிறார்கள், அனைவரின் வீடியோ எடுக்கப்பட்டுக் கொண்டி ருக்கிறது. ஒருவேளை வேண்டாம் என்று கூறி பின்பு செய்தீர்கள் என்றால் பின்பு நீங்கள் வேண்டாம் என்று கூறினீர்கள், பிறகு ஏன் செய்தீர்கள் என்ற கேசட் அனுப்பி வைக்கப்படும். அனுப்பி வைக்கப்படுமா? அல்லது பாதுகாப்பாக இருப்பீர்களா ? உறுதியாகவா அல்லது கொஞ்சம் கொஞ்சம் உறுதியற்ற நிலை, கொஞ்சம் கொஞ்சம் உறுதியான நிலையா?

இந்த சீசன் வைர விழாவை தொடங்குவதாக இருக்கிறது என்றால் இந்த சீசனில் நீங்களோ மாநாடுகள், சொற்பொழிவுகள் மற்றும் மேளாக்களின் அதிக நிகழ்ச்சிகள் செய்திருக் கிறீர்கள், ஆனால் பாப்தாதா விசேஷமாக இந்த வைர விழாவில் ஒரு நிகழ்ச்சியை செய்ய விரும்புகிறார். அதற்கு தயாராக இருக்கிறீர்களா?

இந்த வைரவிழாவில் எந்தக் குழந்தையைப் பார்த்தாலும் இரண்டு வருடக் குழந்தையாக இருந்தாலும், 60 வருடக்குழந்தையாக இருந்தாலும், 2 மாத குழந்தையாக இருந்தாலும், டீச்சரோ, மாணவர்களோ, சமர்ப்பணமானவர்களோ அல்லது இல்லறத்தில் இருப்பவர்களோ அனைவரும் இந்த பவள விழா ஆண்டில் தூய்மை மூலமாக நாங்கள் இயற்கையையும் தூய்மையாக்கு வோம் என்ற சவாலை தந்தையுடன் சேர்ந்து நீங்கள் அனைவருமே எடுத்திருக் கிறீர்கள். இது எண்ணம் மட்டும் தானா அல்லது இதை தந்தைதான் செய்ய வேண்டுமா? தந்தைக்கு துணையாக இருக்கிறார்களா? கொஞ்சம் கையை மட்டும் உயர்த்தி விடுகிறார்கள். சாதுர்யமாக செய்கிறார்கள். அந்த மாதிரி செய்யாதீர்கள். ஆக முழு உலகத்தில் ஒவ்வொரு குழந்தையும் பற்றுதலிலிருந்து விடுபட்டவர் ஆகட்டும் என்று பாப்தாதா விரும்புகின்றார். சாதனங்களின் மேலும் மனிதர்கள் மேலுள்ள பற்றுதலிலிருந்து விடுபட்டவர் ஆகட்டும். சாதனங்களிடத்திலும் பற்றுதல் வேண்டாம். உபயோகப்படுத்துவது என்பது வேறு விசயம் ஆகும். மற்றும் பற்றுதல் என்பது வேறு விசயம் ஆகும். ஆக பாப்தாதா பற்றுதலிலிருந்து விடுபட்ட ஆண்டாக கொண்டாட விரும்புகிறார். இந்த நிகழ்ச்சியை செய்ய விரும்புகிறார். இந்த நிகழ்ச்சியில் நீங்கள் அனைவரும் துணையாக இருப்பீர்களா? இந்தக் காரணமாகி விட்டது என்று பின்போ கூறமாட்டீர்களே! என்ன காரணமாக இருந்தாலும், இமயமலை கூட வந்து விழுந்தாலும் நீங்கள் அந்த இமயமலையை விட்டும் கூட விலகி வந்து

விடுங்கள். இவ்வளவு தைரியம் இருக்கிறதா? முதலில் டீச்சர்கள் சொல்லுங்கள். நம்முடைய டீச்சர்களுக்கு பாப்தாதா கூறுகிறார் என்று மாணவர்கள் குஷியடைகிறார்கள். மேலும் டீச்சர்களோ சகயோகத் திற்காக எப்பொழுதுமே உதவி செய்பவர்களாக இருக்கவே இருக்கிறார்கள். ஏனென்றால் வரும் நாட்களில் இன்றைய உலகத்தில் யார் தன்னைத்தானே தர்ம ஆத்மா, மகான் ஆத்மா என்று கூறிக் கொள்கிறார்கள், அவர்களுடைய தூய்மையின் அஸ்திவாரம் கூட ஆட்டம் காணும். மேலும் அந்த மாதிரி நேரத்தில் தொடக்கத்தில் எப்பொழுது பிரம்மா பாபா நிமித்தமான வராக ஆனார் என்றால் நிந்தனை எக்காரணத்திற்கான விசயமாக இருந்தது ? தூய்மையின் காரணம் தான் இல்லையா. இல்லை என்றால் வயதில் பெரியவர்கள் ஒருவருக்குக் கூட பிரம்மா பாபாவுடைய கடந்த கால வாழ்க்கையில் ஏதாவது தவறை சுட்டிக் காண்பிப்பதற்கு தைரியம் இருந்ததில்லை அந்த மாதிரி பெர்சனாலிட்டி (தனித்தன்மை) உடையவராக இருந்தார் ஆனால் தூய்மையின் காரணமாக அனைவரிடமிருந்து வசை பெற வேண்டியதாக இருந்தது. மேலும் இந்த பரமாத்மா ஞானத்தின் புதுமையே தூய்மை தான். நெருப்பும் பஞ்சும் சேர்ந்திருந் தாலும் உடனே நெருப்பு பிடிக்க முடியாது என்று கூறுகிறீர்கள் இல்லையா? இது ஒரு சவால் தான் இல்லையா? யார் தம்பதிகளாக இருக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். உங்கள் அனைத்து தம்பதியர் களுக்கும் இது சவாலா அல்லது கொஞ்சம் கொஞ்சம் நெருப்பு பிடிக்கும். பின்பு அணைத்து விடுவீர்களா? உலகத்திற்கே சவால் தான் இல்லையா? முழு உலகத்திலுமே தூய்மையின்றி யோகம் நிறைந்த ஆத்மாவாக, ஞான சொரூப ஆத்மாவாக ஆகவே முடியாது என்று சொற்பொழிவில் நீங்கள் முழு உலகத்திற்கும் கூறுகிறீர்கள் இல்லையா? இது உங்கள் அனைவரின் சவால் தான் இல்லையா? எந்த தம்பதியினர் இது என்னுடைய சவால் என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது. ஒரே குரூப்பில் இருவர் சேர்ந்து வந்திருப்பது அதிகமாக இருக்கிறார்கள். அப்படியானால் வைர விழாவில் என்ன செய்வீர்கள்? பற்றுதலிலிருந்து விடுபட்டவர், கோபத்திலிருந்து விடுபட்டவராக ஆகி விட்டீர்கள் அல்லவா? கொஞ்சம் கொஞ்சம் கோபத்தை அனேகரிடம் பாப்தாதாவும் பார்த்தார் ஆனால் இந்த தடவை அந்த கொஞ்சத்தையும் விட்டு விட்டடார்கள். இருந்தாலும் வெளி நாட்டிலும், பாரதத்திலும் யார் கவனம் வைத்து சம்பூர்ண ரூபத்தில் கோபத்திலிருந்து விடுபட்ட வாழ்க்கையை நடை முறையில் அனுபவம் செய்தார்கள், செய்து காண்பித்தார்கள், அவர்கள் அனைவருக்கும் பாப்தாதா பலகோடி மடங்கையும் விட அதிகமாக வாழ்த்துக்கள் கொடுக்கிறார். ஏனென்றால் வெளிநாட்டினருக்கும், பாரத தேசத்தினருக்கும் இந்த நேரம் அனைவரின் புத்தி என்ற தொலைபேசி இங்கு மதுபன்னில் இணைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அனைவரின் கனெக்ஷன் (இணைப்பு) மதுபன்னில் இருக்கிறது. யார் நல்ல விதத்தில் உறுதியான எண்ணம் செய்தார்களோ அவர்களுக்கு பாப்தாதாவிடமிருந்து விசேஷமாக அதிகப்படியான உதவியும் கிடைத்தது என்ற இதை அனைவரும் அனுபவம் செய்திருப்பீர்கள். ஒரு வருடமோ கோபத்தை அழித்து விட்டோம் இப்பொழுதோ எப்படி வேண்டுமென்றாலும் இருக்கலாம் என்று அப்படி நினைக்காதீர்கள். ஒருவேளை முழுமையாக பற்றுதலிலிருந்து விடுபட்டதை அனுபவம் செய்தீர்கள் என்றால் தானாகவே கோபத்திலிருந்து விடுபட்டவராகவும் ஆகிவிடுவீர்கள். கோபமும் ஏன் வருகிறது? எந்த விசயத்தை எந்த பொருளை நீங்கள் விரும்புகிறீர்களோ மேலும் அது நிறைவேறவில்லை அல்லது

கிடைக்கவில்லை என்றால் கோபம் வருகிறது அல்லவா? உங்களுடைய எண்ணம் அது சரியானதாக இருந்தாலும் அல்லது தவறானதாக இருந்தாலும் எப்பொழுது நிறைவேறவில்லையோ அப்பொழுது கோபம் வருகிறது. உதாரணமாக மாநாடு நடக்கிறது, நிகழ்ச்சி நடக்கிறது அதில் என்னுடைய பங்கும் வேண்டும் என்று நீங்கள் விரும்பு கிறீர்கள். எங்களுக்கும் எப்பொழுது வாய்ப்பு கிடைக்கும்? உங்களுடைய விருப்பம் இருக்கிறது மேலும் நீங்கள் சமிக்ஞையும் செய்கிறீர்கள் ஆனால் உங்களுக்க வாய்ப்பு கிடைக்கவில்லை என்றால் அந்த நேரம் சிடுசிடுப்பு வருகிறதா? அல்லது வருவதில்லையா? மிகப் பெரிய கோபம் வராவிட்டாலும் ஆனால் யார் வேண்டாம் என்று கூறினாரோ அவரைப் பற்றி வீணான எண்ணமும் வரும் இல்லையா? அப்படியானால் இது தூய்மையா? இல்லை தானே. தன்னைத் தானே சேவைக்கு ஆஃபர் செய்வது, கருத்துக்கள் கூறுவது, இதைப் பொறுத்தளவில் முழு சுதந்திரம் இருக்கிறது ஆனால் கருத்துக்கு பின்னால் அந்தக் கருத்தை ஆசையின் ரூபத்தில் மாற்றம் செய்யாதீர்கள். எப்பொழுது எண்ணம் ஆசையின் ரூபத்தில் மாறுகிறதோ அப்பொழுது சிடுசிடுப்பும் வருகிறது, வாய் மூலம் கோபமும் ஏற்படுகிறது மற்றும் கைகளும் நீளுகிறது. கைகள் நீளுவது இது மிகப்பெரிய கோபம் ஆகும் ஆனால் சுயநலம் இல்லாதவராகி கருத்தை கொடுங்கள். நான் கூறினேன் என்றால் நடக்க வேண்டும் என்று சுயநலம் வைத்து செய்யாதீர் கள். ஆஃபர் செய்யுங்கள். அதிலொன்றும் தவறில்லை ஆனால் ஏன், என்ன என்பதில் செல்லா தீர்கள். இல்லையென்றால் பொறாமை, வெறுப்பு இந்த ஒவ்வொரு கூட்டாளிகளும் வருகிறார் கள் எனவே ஒருவேளை தூய்மையின் நியமத்தை உறுதியாக்கினீர்கள், பற்றுதலிலிருந்து விடுபட்டவர் ஆகி விட்டீர்கள் என்றால் நான் சொன்னது நடக்கத்தான் வேண்டும் என்ற இந்தப் பற்றுதலும் வைக்கக் கூடாது நடக்கத்தான் வேண்டும் என்று அப்படியும் இருக்கக் கூடாது. ஆஃபர் செய்தீர்கள் இது சரி தான். உங்களுடைய சுய நலமற்ற ஆஃபர் வெகுவிரைவில் சென்றடையும் சுயநலம் மற்றும் பொறாமையின் வசமாகி செய்யப்படும் ஆஃபர் இன்னும் கோபத்தை உருவாக்கும் அப்படியானால் டீச்சர்கள் என்ன செய்வீர்கள் 100 சதவிகிதம் பற்றுதலிலிருந்து விடுபட்டவராக ஆவீர்களா? ஆம் அல்லது இல்லை என்று கூறுங்கள். வெளி நாட்டினர் சரி என்று கூறுங்கள். நல்லது.

அப்படியே டைமண்ட் ஜூப்லி கொண்டாட வேண்டாம். டைமண்ட் ஜூப்லியில் ஏதாவது புதுமை தன்மையை காட்ட வேண்டும். இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அரசாங்கத்தின் கண்கள் திறக்கட்டும். செய்யவே முடியாது என்று எந்த காரியமும் கிடை யாது. மேலும் கூட அவர்களாகவே முன் வருவார்கள், உதாரணமாக மகா மண்டேலேஷ்வர் இங்கு வருகின்ற பொழுது அவர்கள் என்ன செய்ய முன்வருகிறார்கள்? நமது ஆசிரமத்தை பிரம்மா குமாரர்களும் குமாரிகளும் நடத்துகிறார்கள். அதுபோல கேட்கிறோம் அல்லவா. எனவே அனைவரும் டிபார்மெண்ட் (துறைகள்) தானாகவே செய்வதற்கு முன்வருவார்கள். அப்படிப்பட்ட நடை முறையில் சொரூபம் செய்ய வேண்டும் - இது தான் டைமண்ட் ஜூப்லி ஆகும். ஆனால் முதலாவது உறுதிமொழி என்னவாக இருக்கிறது? என்ன ஆக வேண்டும் (பற்றற்றவர் ஆவது) அப்பொழுது தான் இவை அனைத்தும் செய்ய முடியும். இப்பொழுதும் கூட குழந்தையை அடித்துக் கொண்டிருந்தால் குழந்தைகள் எப்படி நல்லவர் களாக இருப்பார்கள். மேலும் தங்களுக்குள் பலவீனமாக இருக்கிறோம் என்றால் மகாத்மாக் கள் எப்படி காலடியில் வருவார் கள். எந்தளவு தூய்மை என்ற துண்னை உறுதி

செய்து விட்டீர்கள் என்றால் அந்தளவு தூய்மையின் துண்கள் லைட் ஹவுஸ் தனது வேலையை செய்யும். நல்லது.

நாலா பக்கத்திலுமுள்ள இதயத்தில் பதிந்துள்ள பாப்தாதாவின் செல்லமான சிரேஷ்ட ஆத்மாக் களுக்கு, சதா பாபாவின் ஒவ்வொரு கட்டளையும் ஏற்றுக் கொள்வதின் மூலம், தனக்கும் மற்றவர்களின் ஒய்வையும் சமர்பணம் செய்ய வைக்கக் கூடிய, சதா தூய்மையின் துண்களை உறுதியாக மாற்றக்கூடிய மேலும் தூய்மையின் லைட், லைட் ஹவுஸ் ஆகி பரப்பக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா தன்னை பற்றற்றவராக ஆக்கக்கூடிய பாபா விற்கு நெருக்கத்தில் இருக்கக்கூடிய, வரக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா வின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

அயல்நாட்டில் இருக்கக்கூடிய நாலாபக்கத்திலுமுள்ள குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் விசேஷமான அன்பு நினைவுகள், ஏனெனில் அந்த நினைவு மடல் எப்பொழுதுமே அனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள். யாரெல்லாம் கடிதங்கள் அனுப்பினார்களோ, அவர் களுக்கும் கூட விசேஷமான நினைவு மற்றும் யாரெல்லாம் இதயபூர்வமாக அன்பு நினைவு களை அனுப்பி யுள்ளார்களோ அவர்களுக்கும் அன்பு நினைவுகள்.

வரதானம் : நம்பிக்கை புத்தியுடையவராகி குழப்பமான சூழ்நிலையிலும் கூட உறுதியாக இருக்கக்கூடிய வெற்றி இரத்தினம் ஆகுக.

நம்பிக்கை மற்றும் வெற்றி - இவை இரண்டும் மிகவும் இணை பிரியாத தோழர்கள். எங்கு நம்பிக்கை இருக்கிறதோ, அங்கு வெற்றி அவசியம். ஏனெனில் பாபா சர்வசக்திவானாக இருக்கிறார் மேலும் நான் மாஸ்டர் சர்வசக்திவான் இருக்கிறேன் என்ற நம்பிக்கை இருக்கிறது, வெற்றி வேறு எங்கு செல்லும்? அப்படி நம்பிக்கையுடையவர்கள் ஒருபொழுதும் தோல்வி பெற முடியாது. நம்பிக்கையின் அஸ்திவாரம் எந்த புயலாலும் அசைக்க முடியாது. குழப்பத் திலும் கூட ஆடாமல் - அசையாமல் இருப்பது. இதைத்தான் நம்பிக்கை புத்தி வெற்றி இரத்தினம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் பாபாவிடம் நம்பிக்கையுடன் இருப்பது அல்ல, தன்னிடமும் நாடகத்திலும் கூட நம்பிக்கையுடன் இருப்பது.

சுலோகன்: யார் தேகத்தின் அனைத்து தொடர்புகளிலிருந்து விடுபட்டு , ஃபரிஸ்தா ஆவதற்கான முயற்சி செய்பவர் தான் பறக்கும் பறவையாக இருப்பவர்.